## 22

# "ஒரே மனுஷனாலே"

## (5:12-21க்கு ஒரு முன்னுரை)

ரோமர் 5:12-21 வசனப்பகுதியானது மனிதகுலத்திற்கு ஆதாம் அறிமுகப்படுத்திய பிரச்சனைகள் யாவற்றையும் - மற்றும் அவற்றைவிட அதிக மானவற்றையும் - பற்றிக் கிறிஸ்து பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார் என்று உறுதிப்படுத்துகிறது. J. D. தாமஸ் என்பவர் இதைப் பின்வருமாறு கூறினார்: "ஆதாமுக்குள் நாம் இழந்தவற்றைக் கிறிஸ்துவுக்குள் ஆதாயப்படுத்திக் கொள்கிறோம் ... கிறிஸ்துவின் மூலமாக நமது ஆதாயமானது ஆதாமுக்குள் நமது இழப்பைவிட மிகவும் அதிகமாக உள்ளது."[1] அதுவே ரோமர் 5ன் இறுதிப்பாதி யினுடைய அடிப்படைச் செய்தியாக உள்ளது.

அதை அப்படியே விட்டுவிட்டு ரோமர் 6ம் அதிகாரத்திற்குச் செல்லும்படி சோதிக்கப்படுதல் இருக்கலாம், ஆனால் குறைந்தபட்சம் பின்வரும் மூன்று காரணங்களுக்காக நாம் ரோமர் 5:12-21ஐப் படிக்காது விட்டுச் சென்றுவிட இயலாது. முதலாவது, ரோமருக்கு எழுதிய நிருபத்தின் எல்லா வசனப்பகுதிகளையும் நாம் நம்மால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகக் கையாள வேண்டியது அவசியமாக உள்ளது. இரண்டாவது, இவ்வசனப்பகுதியில் உள்ள சில சிந்தனைகள் மற்றும் சொற்றொடர்கள், பின்தொடரும் அதிகாரங்களில் விரித்துரைக்கப்படுகின்றன, எனவே பின்னணி என்ற வகையில் நாம் இந்த வசனப்பகுதியைப்பற்றிச் சற்றே புரிந்துகொள்ளுதல் அவசியமாகிறது. மூன்றாவது, இவ்வசனங்களில் பரிசுத்த ஆவியானவர் வலிவார்ந்த சத்தியங்களை உள்ளடக்கினார்.

ரோமர் 5:12-21ஐப் புறக்கணித்து அடுத்த அதிகாரத்திற்குக் கடந்து செல்லும்படிக்கு நான் தூண்டப்படுவதுகூட ஏன் ஏற்படவேண்டும்? ஏனென்றால் இவ்வசனப்பகுதி *மிகவும்* கடினமானதாக உள்ளது. மோசஸ் E. லார்டு என்பவர் இதை, "இந்த நிருபத்தின் மிகவும் கடினமான வசனப்பகுதிகளில் ஒன்று" என்று அழைத்தார்.[2] சிலர் "ரோமர் 5:12-21 முழு வேதாகமத்திலும் மிகவும் கடினமான வசனப்பகுதியாக இருக்கிறது என்று கருதுகின்றனர்" என்று ரிச்சர்டு ரோஜர்ஸ் என்பவர் கூறினார்.[3] 12ம் வசனம்மீது விளக்கம் அளிக்கையில் டக்ளஸ் J. மூ என்பவர் "ஒவ்வொரு வார்த்தையும் - சொல்லப்போனால் ஒவ்வொரு நிறுத்தற்குறியும்! - வலிவார்ந்த நேரெதிர் கருத்திற்குப் பொருளாக இருக்கிறது" என்று குறிப்பிட்டார்.[4]

பல காரணங்களுக்காக ரோமர் 5:12-21 வசனப்பகுதியானது விளக்கவுரையாளர்களுக்கு அறைகூவல்களை அளிக்கிறது. பவுலின் எழுத்து நடை என்பது ஒரு காரணமாக உள்ளது. அவ்வப்போது அவர் (12ம் வசனத்தின் முடிவைக் காணவும்) ஒரு வாக்கியத்தை முடிக்காதிருந்தார். மேலும், அவர் ஒரு சிந்தனையில் இருந்து இன்னொரு சிந்தனைக்கும் அதிலிருந்து வேறொரு சிந்தனைக்கும் தாவினார்; 12ம் வசனத்தில் தொடங்கிய கூற்று 18ம் வசனம் வரையிலும் முடிவதில்லை. பின்பு, அவர் வினைச்சொற்களையும்

மற்ற திறவுகோல் வார்த்தைகளையும் விட்டுவிட்டார் (எடுத்துக்காட்டாக, 16ம் வசனத்தில் மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டது என்று சுட்டிக்காண்பிக்கும் வகையில் [NASB வேதாகமத்தில்] சாய்வெழுத்துக்களில் உள்ள வார்த்தைகளைக் கவனிக்கவும்). மற்றும், ஆதாமுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையில் ஒரு இணைகருத்தைத் தரவழைத்தல் என்பதே இந்த வசனப் பகுதியைப் பொறுத்தமட்டில் பவுலின் நோக்கமாக இருந்தது. சிலவேளைகளில், அவர் எவ்வாறு அவர்கள் ஒன்றுபோலிருந்தனர் என்று சுட்டிக்காண்பித்தார்; மற்றும் சிலவேளைகளில், ஒப்பீடு என்பதே இருப்பதில்லை.

இந்தப்பகுதியானது பெருமளவில் செறிவாக்கப்பட்டுள்ளது என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது.[5] ஒரு எழுத்தாளர், "இது ஒருவேளை பவுலின் எழுத்துக்கள் எல்லாவற்றிலும் மிகவும் செறிவாக்கப்பட்ட வசனப்பகுதி யாக இருக்கலாம்" என்று குறிப்பிட்டார்.[6] (நான் 5:12-21ஐ வாசிக்கையில், நீண்ட நாட்களுக்கு முன்பு நான் எழுதிய சுருக்கமான பிரசங்கக்குறிப்பு ஒன்றை நான் கண்ணோக்கும்போது என்ன நடைபெறுகிறது என்பது என் நினைவுக்கு வருகிறது. நான், "*அதன்மூலம்* நான் எதை அர்த்தப்படுத்தினேன்? ... அந்தக் கருத்துப்பற்றி நான் என்ன கூறினேன் என்பதைக் குறித்து நான் ஆச்சரியம் அடைகிறேன். ... நான் பயன்படுத்திய 'ஒரு நாய் பற்றிய விவரிப்பு' என்னவாக *இருந்தது?*" என்று நினைக்கிறேன்.) பவுலின் விவாதம் மிகவும் கொஞ்சமான வார்த்தைகளில் தெரிவிக்கப்பட்டதாக இருப்பதால், அவரது சிந்தனைகளைப் புரிந்து கொள்ள இவ்வேத வசனப்பகுதியை விரிவாக்குதல் அவசியமானதாக உள்ளது. தேவைப்படும் வார்த்தைகள் என்ன என்பது பற்றி நாம் உறுதியா யிருக்க இயலாது என்பதே பிரச்சனையாக உள்ளது. இதன் விளைவாக, நாம் "வேதாகமத்தின் பிற பகுதிகளில் இருந்து பெற்றுள்ள உறுதிப்பாடுகளைக்"[7] கொண்டு "கோடிட்ட இடங்களை நிரப்ப" முயற்சிக்கிறோம்.

பவுலின் எழுத்து நடையும் அவரது வார்த்தைகளுக்குத் துணை வார்த்தைகள் இட வேண்டிய அவசியமும் சேர்ந்து, இவ்வேத வசனப்பகுதி பற்றிப் பிரதான மான கருத்துவேறுபாட்டை விளைவித்துள்ளன. உண்மையான போதகர்கள் என்று நான் கருதுகிற, திறமைவாய்ந்த கல்வியாளர்களும்கூட (தீத்து 1:13) பின்வருவனபோன்ற கேள்விகளுக்குப் பதில் அளிப்பதில் கருத்து ஒன்றுபடுவ தில்லை. 12ம் வசனத்தில் உள்ள "மரணம்" என்பது சரீரப்பிரகாரமான மரணமா, ஆவிக்குரிய மரணமா, அல்லது இவ்விரண்டின் கூட்டுக்கருத்தா? 12ம் வசனத்தில் "எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால்" என்பது 3:23ல் உள்ளதுபோன்று தனிப்பட்ட பாவத்தைக் குறிப்பிடுகிறதா, அல்லது இவ்வார்த்தைகள் வேறு எதையாவது அர்த்தப்படுத்தக்கூடுமா? மதிப்புமிக்க எழுத்தாளர்களிடையே நிலவும் இவைபோன்ற கருத்துவேறுபாடுகள், ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் படிக்கத்தொடங்கும் மாணவரை ஊக்கமிழந்துபோகப் பண்ணக்கூடும்.

கடைசியாக, மனிதரால் ஏற்படுத்தப்படுகிற உபதேசங்களைப் பரப்பு கின்றவர்கள், இவ்வசனப்பகுதியில் உள்ள மறைவான அம்சங்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர் என்ற உண்மையினால், ரோமர் 5:12-21ஐ விளக்கப்படுத்தும் நமது முயற்சி சிக்கலாக்கப்படுகிறது. லேர்ரி டீயெஸன் என்பவர், நமது வேதவசனப்பகுதி "வேதாகமம் முழுவதிலுமே மிகவும் தவறாகப் பயன்படுத்தப்பட்ட வசனப்பகுதிகளில் ஒன்றாக இருக்கிறது" என்று கருத்துத் தெரிவித்தார்.[8] எனவே இவ்வசனப்பகுதி எதைப் *போதிக்கிறது* என்பதை

ஆழ்ந்து சிந்திப்பதற்கு முன் இது எதைக் *கூறுவதில்லை* என்பதை வலியுறுத்துதல் அவசியமாயிருக்கும்.

ரோமருக்கு எழுதிய நிருபத்தில் நமது பயணத்தின் இப்பகுதியில் சாலை அறிவிப்புக்குறி ஒன்று வைக்கப்பட்டிருக்கும் என்றால், அதில் "அபாயமான சூழ்நிலைகள்! உங்கள் சொந்தப்பொறுப்பிலேயே தொடர்ந்து செல்ல வேண்டும்!" என்று கூறப்பட்டிருக்கும். இந்தப்பகுதியினூடே நமது பயணமானது சுலப மானதாக இராது. இருப்பினும், இவ்வசனப்பகுதி பற்றிய மூன்று பாடங்களை நீங்கள் முடிக்கும் வேளையில் நீங்கள் ஆதாயப்படுத்திக் கொள்ளவிருக்கும் உட்கண்ணோட்டமானது இந்தக்கல்விப்பயணத்தைத் தகுதிவாய்ந்ததாக்கும் என்று நான் நம்புகிறேன்.

இந்தப் பாடம் ஒரு அஸ்திபாரத்தை இடும். அடுத்த எடுத்துரைப்பில் நாம் நமது படிப்பைத் தொடங்குவோம்.

## இவ்வசனப்பகுதி எதைப் *போதிப்பதில்லை*

ரோமர் 5:12-21 எதைப் போதிக்கிறது என்பதைவிட எதைப் *போதிப்பதில்லை* என்பது பற்றி நாம் அதிக நிச்சயமாய்க் கூறக்கூடிய வசனப்பகுதிகளில் ஒன்றாக உள்ளது. இப்படிப்பட்ட கருத்தைக் குறித்துச் சிலர் ஏளனம் செய்கின்றனர். அவர்கள், ''இது எதைப் *போதிக்கிறது* என்பதுபற்றி நீங்கள் நிச்சயமில்லாதிருந்தால், இது எதைப் போ*திப்ப தில்லை* என்பதுபற்றி நீங்கள் எப்படி நிச்சயமாயிருக்க முடியும்?'' என்று அவர்கள் கேட்கின்றனர். இரு மனிதர்கள் பேசிக்கொண்டிருக்கையில், ஒரு பெண்மணி அவ்விடத்தைக் கடந்து நடந்து செல்கிறார். ஒரு மனிதர் இன்னொருவரிடத்தில், ''அந்தப் பெண் யார்? உங்கள் மனைவியா?'' என்று கேட்கிறார். இரண்டாம் மனிதர், ''அவர்கள் யாராக *இருக்கிறார்* என்று எனக்குத் தெரியாது, ஆனால் அவர்கள் யாராக *இருப்பதில்லை* என்று உங்களுக்கு நான் கூறமுடியும். அவர்கள் என் மனை*வியல்ல*'' என்று பதில் அளித்தார். 5:12-21 பற்றிய ஒவ்வொரு விவரம்பற்றியும் நான் நிச்சயம் கொண்டிராதிருக்கலாம், ஆனால் அது குறிப்பிட்ட சில உபதேசங்களைப் *போதிப்பதில்லை* என்பது பற்றி நான் தைரியமாய்க் கூறமுடியும்.

### இது நாம் ஆதாமின் பாவத்தைச் சுதந்தரிக்கிறோம் என்று *கூறுவதில்லை*

ஏதோ ஒருவகையில் நாம் ஆதாமின் பாவத்தினுடைய குற்றத்தைச் சுதந்தரிக்கிறோம் என்பது, ''கிறிஸ்தவர்கள்'' என்று தங்களை அழைத்துக்கொள்கிறவர்கள் மத்தியில் பரவலாக உள்ள ஒரு நம்பிக்கையாக உள்ளது. மூன்றாம் நூற்றாண்டில், ஏறக்குறைய பவுலுக்கு இருநூறு ஆண்டு களுக்குப்பின், அலெக்சாந்திரியா நகரின் இறையியலாளரான ஓரிகன் என்பவர், "புதிதாய்ப்பிறந்த பச்சிளங்குழந்தைகள் பாவத்திலிருந்து விடுதலையானவர்களாக" இருப்பதில்லை என்று போதித்தார்.[9] ஐந்தாம் நூற்றாண்டில், அகஸ்டைன் என்பவர் அந்தக் கருத்தை விரிவாக்கிப் பிரபலப்படுத்தினார். கத்தோலிக்கர்கள் இதை "ஜென்மப்பாவம் பற்றிய உபதேசம்" என்று அழைத்தனர். பிற்பாடு, பெரும்பான்மையான புரொட்டஸ்டண்டுகள் இந்தக் கருத்தைத் தழுவிக்கொண்டு, "பேரழிவைச் சுதந்தரித்தல்" அல்லது "பேரழிவை முற்றிலும்

*சுதந்தரித்தல்" என்ற சொற்றொடராக்கத்தைத் தேர்ந்துகொண்டனர். அவர்கள் "பச்சிளம் குழந்தைகளின் பேரழிவானநிலை" என்பது பற்றிப் பேசினர், அவர்கள் இந்த "பேரழிவானநிலை" ஆதாமிடத்திலிருந்து சுதந்தரிக்கப்படுவதாக நம்பினர். ஜான் கால்வின் என்பவர், ஆதாம் "நமது இயல்பை மோசம் போக்கி, கறைப்படுத்தி, சீரழித்து, கெடுத்துப்போட்டான்" என்ற கருத்தைப் பராமரித்தார்.[10]*

*"பேரழிவை முற்றிலும் சுதந்தரித்தல்" என்பது சிலவேளைகளில், "கால்வினீய இறையியல் கொள்கை" என்று அழைக்கப்படும் அளவுக்கு அடிப்படையான கொள்கையாக உள்ளது. மக்கள் இரட்சிக்கப்படுவது எவ்வாறு என்பது பற்றிய கால்வினீயக் கருத்திற்குள் "பேரழிவை முற்றிலும் சுதந்தரித்தல்" என்பது எவ்வாறு பொருந்துகிறது என்பதற்கு ஒரு மேல்கண்ணோட்டம் கீழே தரப்படுகிறது:*

- *மக்கள் ஆதாமின் பாவத்தின் கறையுடன் பிறந்திருப்ப தாகக் கூறப்படுகிறது; இவ்வாறு அவர்கள் தங்களைத் தாங்களே இரட்சித்துக்கொள்ள எதுவும் செய்ய இயலாதவர் களாக இருக்கின்றனர் ("பேரழிவை முற்றிலும் சுதந்தரித்துக் கொள்ளுதல்").*
- *மக்களை மறுபடியும் ஜெநிப்பிக்கச்செய்து அவர்களை இரட்சிப்பதற்குத் தேவன் பரிசுத்த ஆவியானவரை அனுப்ப வேண்டும் என்று கால்வினீயக் கொள்கைக்காரர்கள் எதிர் பார்க்கின்றனர் ("பரிசுத்த ஆவியானவரின் நேரடியான செயல்பாடு").*
- *இரட்சிக்கப்படுவதற்கு மக்கள் ஒன்றும் செய்ய இயலாது என்ற நம்பிக்கை கொண்டநிலையில், கால்வினீயர்கள், இழந்துபோகப்படுவதற்கும் தங்களால் ஒன்றும் செய்ய இயலாது என்றும் கூறுகின்றனர் ("விசுவாசத்தை விட்டு விலகிச்செல்ல இயலாமை").*

*ஆதாமின் பாவத்தினால் கறைப்பட்ட நிலையில் இறந்துபோகிற (என்று அவர்கள் நம்பிய) குழந்தைகளைப் பற்றிக் கவலைப்படுதல் என்பது "ஜென்மப்பாவம்" என்ற உபதேசத்தின் துணை உற்பத்திக் கருத்துக்களில் ஒன்றாக உள்ளது. "ஜென்மப்பாவத்தை" எதிர்த்து நிற்பதற்கு அவர்கள் குழந்தைகளை "ஞானஸ்நானப்படுத்த" தொடங்கினர். அது ஞானஸ்நானம் பெறாத குழந்தைகளின் பிரச்சனையை இன்னமும் விட்டுவைத்திருந்தது, எனவே அவர்கள் "ஞானஸ்நானம்பெறாது" மரித்துப்போன பச்சிளம் குழந்தைகளுக்கு இனிவரும் உலகத்தில் "இருட்டுஸ்தலம்" என்ற ஒரு இடத்தைக் கண்டுபிடித்தனர்.[11] இது தவறான உபதேசங்கள் எவ்வாறு பெருகுகின்றன என்பதற்கு ஒரு உதாரணமாக உள்ளது.*

*நாம் "ஜென்மப்பாவம்" என்பது பற்றிய உபதேசத்திற்குத் திரும்பச்செல் வோமாக: மனிதன் எவ்வாறு இப்படிப்பட்ட கருத்தைக் கொண்டுவந்தான்? இந்த உபதேசத்தை முன்மொழிபவர்கள், பாவத்தின் நிரந்தரத்தன்மையையும் தொலைதூரம் சென்றடையும் தன்மையையும் வலியுறுத்தும் (யாத்திராகமம் 20:5 போன்ற) வசனப்பகுதிகளை அல்லது (சங்கீதம் 51:5[12] போன்ற)*

மனிதகுலத்தின் பாவம்நிறைந்த தன்மையை உயர்த்திக்காட்டப் பயன்படும் உயர்வுநவிற்சி (மிகைப்படுத்திக்கூறும்) வசனப்பகுதிகளை மேற்கோள்கள் காண்பிக்கின்றனர். இருப்பினும், ரோமர் 5:12-21 அவர்களின் முக்கிய மான ஆதாரவசனங்களாக இருக்கிறது. ஜேம்ஸ் R. எட்வர்ட்ஸ் என்பவர், அவ்வசனப்பகுதியின் 12ம் வசனம் "ஜென்மபப்பாவம் என்ற உபதேசத்தை வளர்க்கக் காரணமான களமாக இருந்துள்ளது" என்று எழுதினார்.[13]

ஏற்கனவே சுட்டிக்காண்பிக்கப்பட்டபடி, இந்த உபசேதமானது ஒரு வடிவில் அல்லது இன்னொரு வடிவில், கிறிஸ்தவ வட்டாரத்தில் உலகளாவிய வகையில் பெரிதும் ஒப்புக்கொள்ளப்பட்ட உபதேசங்களில் ஒன்றாக உள்ளது. இருந்தபோதிலும், இது ரோமர் 5ல் *போதிக்கப்படவில்லை* என்று நான் தைரிய மாகக் கூறமுடியும். இதைத் தொடங்க, இவ்வசனத்தில் பவுலின் நோக்க மானது, பாவத்தின் இயல்பைப் பற்றிய ஆழமான படிப்பை முன்வைத்தலாக இருக்கவில்லை. பல விளக்கவுரையாளர்கள், பவுல் இப்படிப்பட்ட நோக்கம் கொண்டிருக்கவில்லை என்று ஒத்துக்கொள்கின்றனர்.

- "ரோமர் 5:12-21 வசனப்பகுதி 'ஜென்மபப்பாவம்' என்பதைத் தனது கவனக்குவிப்பாகக் கொண்டிருப்பதில்லை ..." (டக்ளஸ் J. மூ).[14]
- "12ம் வசனம் ... பாவத்தின் பிரச்சனையை கோட்பாடு அளவில் கலந்துரையாடுவதில்லை ... இங்கு ஜென்மபப்பாவத்தின் உபதேசத்தை மேம்படுத்துதல் என்பது [பவுலின்] நோக்கமாக இருப்பதில்லை" (ஜேம்ஸ் R. எட்வர்ட்ஸ்).[15]
- "மோசம்போக்கும் இயல்பு அல்லது பாவம்நிறைந்த விருப்பச்சாய்வுகள் பற்றிப் பவுல் ஒன்றும் கூறுவதில்லை; இப்படிப்பட்ட கண்ணோக்குகள் வசனத்திற்குள் [இல்லாத] சிலவற்றை வாசித்தலாக உள்ளன" (லியோன் மோரிஸ்).[16]

மேலும், 12 முதல் 21 வரையிலான வசனங்கள் "பேரழிவை சுதந்தரித்தல்" என்ற உபதேசத்தைப் போதிக்கின்றன என்ற உரிமைகோருதலையும் நான் மறுக் கிறேன், ஏனென்றால் அப்படிப்பட்ட முடிவு வேதாகமத்தின் விளக்கம்பற்றிய அடிப்படைக் கொள்கையொன்றை மீறுகிறது. அந்தக் கொள்கையைப் பின்வருமாறு உரைக்க முடியும்: "ஒரு தெளிவற்ற வசனப்பகுதியை வேறு எந்த இடத்திலாவது உள்ள தெளிவான வசனப்பகுதிக்கு முரண்படும்படி விளக்கம்தரவேண்டாம்." இவ்வசனங்கள் பகுதியாகவோ அல்லது முழுமை யாகவோ, *மிகவும்* தெளிவற்றவைகளாக உள்ளன என்பதை ஏறக்குறைய எல்லாருமே ஒப்புக்கொள்கிறோம். விஷயம் இப்படி இருப்பதால், இவ்வசனப்பகுதியானது, பின்வருவன போன்ற வேதாகமத்தின் தெளிவான போதனைக்கு முரண்படும் வகையில் விளக்கம் தரப்படக்கூடாது:

- பிள்ளைகள் ஆதாமின் பாவத்தினால் மோசம்போக்கப்பட்ட அல்லது கறைப்பட்ட நிலையில் அல்ல, ஆனால் தூய்மையானவை களாகவும் பரிசுத்தமானவைகளாகவும் பிறக்கின்றன (மத்தேயு 18:3; 19:14ஐக் காணவும்).
- ஒவ்வொருவரும் தமது தந்தையின் பாவத்திற்கோ (எசேக்கியேல்

*18:20) அல்லது நமது தகப்பனாகிய ஆதாமின் பாவத் திற்கோ அல்ல, ஆனால் தத்தமது சொந்தப் பாவத்திற்கே பொறுப்பாளிகளாக உள்ளனர் (எபேசியர் 2:1; கொலோ செயர் 2:13 ஆகியவற்றைக் காணவும்).*

ஆதாமின் பாவமானது நாம் வாழும் இவ்வுலகின்மீது பேரழிவை ஏற்படுத்தும் விளைவு எதையும் கொண்டிருப்பதில்லை என்று நான் ஆலோசனை தெரிவிக்கிறேனா? இல்லவே இல்லை. நாம் ஆதாமின் பாவத்தின் *குற்றத்தை* சுதந்தரிக்காவிட்டாலும், அவனது பாவத்தின் தொலைதூரம் சென்றடையும் *விளைவுகளை* நாம் சுதந்தரித்து இருக்கிறோம். 17ம் வசனம், JB வேதாகமத்தில் "death reigned over everyone as the *consequence* of one man's fall" ("ஒரு மனிதனின் வீழ்ச்சியின் விளைவாக மரணம் எல்லார்மீதும் ஆளுகை செய்கிறது") என்றுள்ளது. "குற்றம்" மற்றும் "விளைவுகள்" என்பவற்றிற்கு இடையிலான வேறுபாடு என்ன? எனது தந்தை கொலைக்குற்றம் செய்திருந்தால், அவரது குற்றம் என்மீது சுமத்தப்படாது; அந்தக் குற்றத்திற்காக நான் விசாரிக்கப்பட மாட்டேன். இருப்பினும், அவரது செயலின் காரணமாக - மனவலி, வேதனை, மற்றும் சிறுமைப்படுத்தப்படுதல் போன்ற - பலவிளைவுகளால் நான் துன்புறுவேன். ஆதாமின் பாவத்தின் குற்றத்தை நாம் சுதந்தரிப்ப தில்லை, இருப்பினும் அவனது செயலின் விளைவுகளால் நாம் நாள்தோறும் துன்புறுகிறோம் என்று நான் மீண்டும் கூறுகிறேன்.

விளைவுகள் யாவை? 12ம் வசனம் "ஒரே மனுஷனாலே பாவமும் ... உலகத்திலே பிரவேசித்தது" என்று கூறுகிறது. ஏதேன் தோட்டத்தில், துன் மார்க்கத்தின் ஒரே ஒரு பிரதிநிதித்துவம் இருந்ததாகவே ஆதாரம் உள்ளது. சர்ப்பம் (ஆதியாகமம் 3:1) என்பது மாறுவேடத்தில் வந்த சாத்தானாகவோ (வெளிப்படுத்தின விசேஷம் 12:9ஐக் காணவும்) அல்லது சாத்தானுடைய முகவராகவோ இருந்தது. இன்றைய நாட்களில், நாம் "துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் ... போராட்டம்" செய்வதாக நமக்குக் கூறப்படுகிறது (எபேசியர் 6:12). இந்த "பொல்லாத சேனை" எங்கிருந்து வந்தது? ஏதோ ஒரு வகையில், ஆதாமின் கீழ்ப்படியாமை உலகத்தில் பொல்லாத சேனைகள் வெள்ளமெனப் பெருக்கெடுக்க "கதவைத் திறந்து" விட்டதா? எனக்குத் தெரியாது, ஆனால் ஏதோ ஒரு விஷயமானது பூமியில் துன் மார்க்கம் பரவுவதை விசையுடன் தூண்டிவிட்டது.

12ம் வசனம், "பாவத்தினாலே மரணமும் [உலகத்திலே பிரவேசித்தது]" என்று குறிப்பாகக் கூறுகிறது. ஆதாமிடத்தில் தேவன், "ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்" என்று கூறினார் (ஆதியாகமம் 2:17). இந்த எச்சரிக்கை தரப்பட்டிருந்தும்கூட, அவனும் ஏவாளும் அதைப் புசித்தனர் (ஆதியாகமம் 3:6). இதன் விளைவாக, அவர்கள் தோட்டத்தில் இருந்து துரத்தப்பட்டனர் மற்றும் அவர்கள் ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்க இயலாமற்போயிற்று (ஆதியாகமம் 3:24). அது நடைபெற்றபோது, அவர்களின் உடல்கள் சீரழியத்தொடங்கின; அவர்கள் மரிக்கத் தொடங்கினர். மரணத்தின் சாபம் இந்த உலகத்திற்குள் பிரவேசித்தது. மரணத்திற்குமுன் வரக்கூடிய வேதனை மற்றும் உபத்திரவத்தை நினைத்துப்பாருங்கள்; திறந்த கல்லறைகளுக்கு அருகில் சிந்தப்பட்டுள்ள

கண்ணீர்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். மரணத்தைப் பவுல் "சத்துரு" என்று குறிப்பிட்டதில் (1 கொரிந்தியர் 15:26) வியப்பு எதுவுமில்லை. இவை யாவும் ஆதாமின் பாவத்தால் விளைந்தன.

மரணத்தின் வேதனையைவிட மரணத்தை அச்சுறுத்தலாகவும் பலாத்காரப்படுத்துதலாகவும் மிகத்தீவிரமான வகையில் சாத்தான் காலங்களினூடே பயன்படுத்திய விதம் உள்ளது. இயேசுவின் பலியைப்பற்றிப் பேசுகையில் எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் பின்வருமாறு கூறினார்,

> ஆதலால், பிள்ளைகள் [மனிதகுலம் முழுமையும்] மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் [கிறிஸ்து] அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார் (எபிரெயர் 2:14, 15).

ஆண்டுகளினூடே மரணம் என்பது பிசாசானவனுடைய "பெரிய குச்சியாக," மக்களைத் தனது ஆணையின்படி செய்ய பலாத்காரப்படுத்தும் ஒரு ஆயுதமாக இருந்துள்ளது. இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக, சாத்தானுடைய "பெரிய குச்சியை" அவனிடத்தில் இருந்து கர்த்தர் எடுத்துப்போட்டதற்காகத் தேவனுக்கு நன்றி!

இருப்பினும், மாம்சப்பிரகாரமான மரணம் என்பது ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபோது கிழித்துத் திறக்கப்பட்ட பிரச்சனைகளின் பொதியின் மீதான மூடுகையாக மாத்திரமே இருந்தது என்று புரிந்துகொள்ளுங்கள். ஏவாளிடத்தில் தேவன், "நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்" என்று கூறினார் (ஆதியாகமம் 3:16). ஆதாமிடம் அவர் பின்வருமாறு கூறினார்,

> நீ ... புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு
> விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே,
> பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்;
> ... அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; ...
> நீ பூமிக்குத் திரும்புமட்டும்
> உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்;
> நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்
> (ஆதியாகமம் 3:17-19).

சிருஷ்டி முழுவதுமே ஆதாமின் பாவத்தினால் பாதிக்கப்பட்டது (ரோமர் 8:20-22ஐக் காணவும்). பிள்ளை பெறும் வேதனையில் பெண் ஒருத்தி துடிக்கும் ஒவ்வொரு முறையும், வேர்த்து விருவிருக்கும் விவசாயி இன்னொரு களையை வெட்டியெடுக்கும் ஒவ்வொரு முறையும், நாளின் வேலையில் வேலைக்காரர் ஒருவர் கடினமாகப் பாடுபடும் ஒவ்வொரு முறையும், இன்னொரு இயற்கைப் பேரழிவு ஏற்படும் ஒவ்வொரு முறையும், பாவத்தின் தூரம் சென்றடையும் விளைவுகள் பற்றிய கூடுதல் நிரூபணம் ஒன்றை நாம் பெற்றுக்கொள்கிறோம். நாம் பாவம் தொற்றிப்பரவியுள்ள மற்றும் பாவத்தால் சேதப்பட்டுள்ள உலகத்தில்

வாழ்கிறோம். ஆதாமின் பாவம் அவனது சந்ததியார்களுக்குக் கடத்தப்பட்டது என்று வேதாகமம் கூறுவதில்லை, ஆனால் அவனது கீழ்ப்படியாமையின் விளைவுகளால் நாம் அன்றாடம் துன்புறுகிறோம்.

நாம் இந்தத் தலைப்பை விட்டுச் செல்வதற்கு முன், தற்கால விளக்கவுரையாளர்களில் பெரும்பான்மையானவர்கள், ஆதாமின் பாவக்*குற்றம்* ஆத்துமாக்களைக் கறைப்படுத்திய நிலையில் பிள்ளைகள் பிறக்கின்றன என்று இப்போதெல்லாம் போதிப்பதில்லை என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். "முற்றிலுமான பேரழிவைச் சுதந்தரித்தல்" பற்றிய உபதேசத்தை தற்கால ருசிகளுக்கு அதிகம் சுவையாக்குவதற்கு அவர்கள் அதை நீர்த்துப்போகச் செய்துள்ளனர். இப்போது பலர், ஆதாமின் பாவம் எல்லாத் தனிநபர்களுக்குள்ளும், "பாவம்நிறைந்த நாட்டங்களாக" ஆதாமின் "பாவம் நிறைந்த இயல்பில்" இருந்து நாம் சுதந்தரித்துக்கொண்டுள்ள - "பாவத்தை நோக்கிய சாய்தலாக" உள்ளதென்று போதிப்பதைத் தேர்ந்துகொள்கின்றனர். பல எழுத்தாளர்கள், நாம் பாவம் செய்வதற்கு இந்த "பாவம்நிறைந்த இயல்பு"தான் *காரணமாக* உள்ளது என்று தைரியமாகக் கூறுகின்றனர். சிலர், நாம் பாவம் செய்வோம் (அதாவது பாவம் செய்வதிலிருந்து நாம் ஓய்ந்திருக்க இயலாது) என்பது *தவிர்க்க இயலாதது,* ஏனெனில் நாம் "பாவம் நிறைந்த இயல்பை" ஆதாமிடமிருந்து சுதந்தரித்துக் கொண்டுள்ளோம் என்றும்கூட வலியுறுத்துகின்றனர். ஒருசில மொழிபெயர்ப்புகள் இந்த இறையியல் கருத்தைப் பிரதிபலிக்கின்றன. எடுத்துக்காட்டாக, NIV வேதாகமம், "flesh" ("மாம்சம்") (*sarx*) என்ற வார்த்தையை அடிக்கடி, "பாவம்நிறைந்த இயல்பு" என்று மொழி பெயர்க்கிறது (ரோமர் 7:18; 8:4, 5, 8; 13:14). "பாவம்நிறைந்த இயல்பை" கொண்டிருத்தல் என்பது, சிலர் எவ்வாறு பிசாசுத்தனமாகின்றனர் என்பதையும் பிள்ளைகள் ஏன் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிவதில்லை என்பதையும்கூட விளக்குகிறது என்று நமக்குக் கூறப்படுகிறது.

"பேரழிவைச் சுதந்தரித்தல்" பற்றிய திருத்தப்பட்ட இந்தக் கண்ணோட்டத்தில் நான் பிரச்சனைகள் கொண்டுள்ளேன். முதலாவது, இது இன்னமும் முன்பு குறிப்பிடப்பட்ட வேதாகமத்தின் தெளிவான போதனையையும் அத்துடன் கூடுதலாக, தேவன் நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கிற சுயாதீன சித்தம் பற்றிய வேதாகமரீதியான போதனையையும் மீறுகிறது என்று நான் நம்புகிறேன். இரண்டாவது, ஆதாம் தனது "பாவம்நிறைந்த இயல்பை" தனது சந்ததிகளுக்கு எவ்வாறு கடத்த முடியும் என்பதை நான் காண இயலவில்லை. ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பு தான் கொண்டிருந்தவற்றில் சிலவற்றைக் கடத்தினானா? வேறுவார்த்தைகளில் சொல்வதென்றால், அவன் "பாவம்நிறைந்த இயல்பை" கொண்டிருந்ததால் அவன் பாவம் செய்தானா? அப்படியென்றால், ஆதாமைப்படைத்த தேவன், அவனுக்குள் அந்த "பாவம்நிறைந்த இயல்பை" வைத்திருந்தார் என்றாக வேண்டும். ஆகவே ஆதாமின் பாவத்திற்குத் தேவனே பொறுப்பாளியாவார். அந்த முடிவை நாம் நிச்சயமாகவே ஏற்றுக்கொள்ள இயலாது.

ஆதாம் பாவம் செய்யும்*முன்னர்,* அவன் "பாவம்நிறைந்த இயல்பை" கொண்டிருக்கவில்லை என்றால், அவனது "பாவம்நிறைந்த இயல்பு" (இது தற்காலச் சொற்றொடராக்கத் தெரிவாகும்), அவன் தனது சுயாதீனமான சித்தத்தை நடைமுறைப்படுத்தியதால் விளைந்ததாக இருக்க வேண்டும்.

*வேறுவார்த்தைகளில் சொல்வதென்றால், அவனது "பாவம்நிறைந்த இயல்பு" பெற்றுக்கொண்ட ஒரு குணமாக இருந்தது. இவ்விதமாக, "பேரழிவைச் சுதந்தரித்துக்கொள்ளுதல்" பற்றி திருத்தப்பட்ட உபதேசத்தின்படி, ஆதாம் தனது சந்ததிகளுக்குத் தான் பெற்றுக்கொண்ட பண்பை விட்டுச்சென்றான் என்றாகிறது - இது அறிவுக்கு ஏற்புடையதல்லாத ஏற்றுக்கொள்ள இயலாத இன்னொரு முடிவாக உள்ளது. நான் ஒரு விபத்திற்குள்ளாகி எனது கை துண்டாகியிருந்தால் (இது கடைசியில் ஏற்பட்டது என்ற வகையில் பெற்றுக்கொண்ட பண்பாக உள்ளது), எனது பிள்ளைகள் ஒரு கையில்லாமல் பிறப்பார்கள் என்று அர்த்தப்படுவதில்லை.*

*ஆதாம் "பாவம் நிறைந்த இயல்புடன்" படைக்கப்பட்டதால் அவன் பாவம் செய்யவில்லை. அதுபோலவே நாம் "பாவம் நிறைந்த இயல்புடன்" பிறந்ததால் நாம் பாவம் செய்கிறதில்லை. பின்பு, ஏன், அவன் பாவம் செய்தான்? மனித நடக்கையின் ரகசியங்கள் பற்றிய ஒவ்வொன்றையும் அறிந்திருப்பதாக உரிமை கோராமல், ஆதாம் மற்றும் நம்மைக்குறித்த வேதாகம சத்தியங்கள் ஒரு சிலவற்றை மறுஆய்வு செய்ய என்னை அனுமதியுங்கள்:*

- *ஆதாமின் ஆத்துமா தூய்மையானதாகவும் பரிசுத்தமானதாகவும் தேவனால் படைக்கப்பட்டது. அதுபோலவே, நமது ஆத்துமாக் களும் தூய்மையும் பரிசுத்தமும் உள்ளவைகளாக இருக்கின்றன, ஏனெனில் அவை தேவனிடத்தில் இருந்து வருகின்றன (சகரியா 12:1; பிரசங்கி 12:7ஐக் காணவும்).*
- *ஆதாம் சுயாதீன சித்தத்துடன் படைக்கப்பட்டான்; அவன் தேவனுக்குக் கீழ்ப்படியவோ அல்லது கீழ்ப்படியாதிருக்கவோ முடிந்திருந்தது. நாமும்கூட கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியா திருத்தல் என்ற தேவனால் தரப்பட்ட திறனைக் கொண்டுள்ளோம் (உபாகமம் 30:15-20ஐக் காணவும்).*
- *ஆதாம், தேவசாயலில் படைக்கப்பட்ட ஜீவிக்கும் ஆவியாக இருந்தான், ஆனால் அவன் மாம்சப்பிரகாரமான சரீரம் ஒன்றையும் கொண்டிருந்தான். ஆதாமையும் ஏவாளையும் அவர்களின் மாம்சப் பசியின் மூலமாக ஒருவழியில் சோதனைக்காரன் தாக்கினான் (ஆதியாகமம் 3:6). கணக்கு ஒப்புவிக்க வேண்டிய நிலையில் உள்ள ஒவ்வொரு தனிநபரும், ஆவிக்கும் மாம்சத்திற்கும் இடையில் போராட்டத்தை அனுபவிக்கிறார் (மத்தேயு 26:41; 1 யோவான் 2:16; ரோமர் 7:18, 19 ஆகிய வசனங்களை காணவும்).*
- *பரதீசில் (ஏதேன் தோட்டத்தில்)கூட, சோதிக்கப்படுதல் நிலவிற்று. பாவத்தால் வியாதிப்பட்ட உலகத்தில், நாம் சோதிக்கப்படுதலால் தொடர்ந்து மோதப்படுகிறோம் (எபிரெயர் 2:18; 4:15ஐக் காணவும்).*
- *தேர்ந்துகொள்வதற்குச் சுயாதீனம் பெற்றுள்ள ஒருவர் எப்போதுமே சரியான தேர்ந்துகொள்ளுதலை ஏற்படுத்துவார் என்று கூற இயலாது. ஒருவர் சோதிக்கப்பட்டு தவறான தேர்ந்துகொள்ளுதலை ஏற்படுத்தினால், அது பாவமாக உள்ளது. ஆதாம் ஒரு தவறான தேர்ந்துகொள்ளுதலை ஏற்படுத்தினார் - நாமும் அதுபோலவே செய்கிறோம் (ரோமர் 3:23).*

- ஆதாம் சுயாதீன சித்தத்தின் செயல்முறையில் தேவனுக்குக் கீழ்ப்படியாதுபோனான். *அவன்* பாவம் செய்திருந்தபடியால் அவன் குற்றவாளி என்று தீர்க்கப்பட்டான். அதுபோலவே, சுயாதீன ஒழுக்கரீதியான மகவர் என்ற வகையில் நாம் பாவம் செய்கிறோம் மற்றும் பிறரின் பாவங்களுக்கல்ல, *நமது* பாவங்களுக்கே நாம் பொறுப்பாளிகளாக இருக்கிறோம்.

ஆவிக்குரிய வகையில், நாம் ஒவ்வொருவரும் ஆதாமைப்போன்று ஒரே அடிப்படை இடத்தில்தான் நமது வாழ்வைத் தொடங்குகிறோம். நம்மைப்போன்றே, அவனும் ஒரு மனிதப்பிறவியாக இருந்தான். அவன் தவறுசெய்யக்கூடியவனாக இருந்தான், நாமும் தவறுசெய்யக் கூடியவர்களாக இருக்கிறோம். விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ, நாம் ஒவ்வொருவரும் அவன் செய்த அதே அடிப்படைத் தவறைச் செய்கிறோம்: நாம் தேவ னுக்குக் கீழ்ப்படியாமல் போகிறோம். நாம் அதைச் செய்யும்போது, ஆதாம் செய்தவற்றிற்கு அல்ல, ஆனால் நாம் செய்துள்ளவற்றிற்கே நாம் பொறுப்பாளிகள் ஆகிறோம். டீயெஸன் என்பவர் இதைப் பின்வருமாறு குறிப்பிட்டார்: "பாவம் நிறைந்த மரபணுக்களினால் அல்ல, ஆனால் பாவம் நிறைந்த சமூகங்களினாலேயே பாவிகள் உண்டாக்கப்படுகின்றனர்! தேர்ந்துகொள்ளுதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றினாலேயே மக்கள் பாவிகளாகின்றனர்."[17] மீண்டுமாக, நான் ஆதாமின் பாவத்தை நாம் சுதந்தரித்துக்கொண்டு பிறப்பதாக வேதாகமம் *போதிப்பதில்லை* என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

**அது உலகளாவிய இரட்சிப்பைப் *போதிப்பதில்லை***

ரோமர் 5:12-21 வசனப்பகுதியானது, *ஒவ்வொருவரும்* இரட்சிக்கப் படுவார்கள் என்று நம்புகிறவர்களாலும் ஆதாரவசனமாகப் பயன்படுத்தப் படுகிறது. அவர்களின் நிலைப்பாடு சிலவேளைகளில், "அகிலத்துவத்தின் உபதேசம்" என்று அழைக்கப்படுகிறது.

இந்த விவாதம் 18ம் வசனத்தின்மீது மையங்கொண்டுள்ளது: "ஆகை யால் ஒரே மீறுதலினாலே [தோட்டத்தில் ஆதாமின் பாவத்தினாலே] எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரேநீதி யினாலே [சிலுவையில் கிறிஸ்துவின் மரணத்தினாலே] எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று." ஆதாமின் பாவம் எல்லாரையும் ஆக்கினைக்குள்ளாக்கிற்று, ஆனால் கிறிஸ்துவின் மரணம் எல்லா ருக்கும் இரட்சிக்கப்படும்படி ஆதாமின் பாவத்தினுடைய விளைவுகளைத் திருப்பிப்போட்டது என்பது [அவர்களின்] நம்பிக்கையாக உள்ளது. மீண்டுமாக, நாம் வேதவசனங்களை விளக்கப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதலில் பிரதானமான தவறாக உள்ள, மறைவான வேதவசனப்பகுதிக்குத் திறவுகோல் போதனை நிலைப்பாட்டை அடிப்படையாக அமைத்தலுக்கு உதாரணத்தைக் கொண்டுள்ளோம்.

எல்லாரும் இரட்சிக்கப்*படுவதில்லை* என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. பல வசனப்பகுதிகள் இதற்கு மேற்கோளாகக் காண்பிக்கப்பட முடியும் (மத்தேயு 25:34, 41, 46ஐக் காணவும்), ஆனால் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பவுலின் சொந்தக் கூற்றுகளுக்கு அப்பால் நாம்

கண்ணோக்க வேண்டிய அவசியம் இல்லை. 2ம் அதிகாரத்தில் அவர் "தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாள்" பற்றிப் பேசினார் (வசனம் 5), அதில் அவர் "சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் அநியாயத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கோ உக்கிரகோபாக்கினை வரும்" என்று கூறினார் (வசனம் 8). 12ம் அதிகாரத்தில் அவர் மீண்டும் "தேவனுடைய கோபாக்கினை" பற்றிப் பேசி, பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காண்பித்தார்: " 'பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற் செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (வசனம் 19).

நமது வசனப்பகுதியில் உள்ள "பல" மற்றும் "எல்லா" என்பது போன்ற வார்த்தைகளைச் சிலர் பற்றிக்கொண்டு, இவ்வசனப்பகுதி சகலருக்கும் இரட்சிப்பு என்று போதிக்காதிருந்தபோதிலும், இழந்துபோகப்படுபவர்களைக் காட்டிலும் மிகவும் அதிகமானவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் எனப் போதிக்கின்றதென்று முடிவு செய்கின்றனர். நாம் யாவரும் அவ்வாறு இருக்க வேண்டும் என்றே விரும்புகிறோம் - ஆனால் இரட்சிக்கப்படுபவர்களைக் காட்டிலும் மிகவும் அதிகமானவர்கள் இழந்துபோகப்படுவர் என்ற இயேசுவின் தெளிவான போதனையை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும் (மத்தேயு 7:13, 14).

5:18ன் அர்த்தத்தை நாம் பிற்பாடு ஒருபாடத்தில் கலந்துரையாடுவோம். இந்த வேளைக்கு, இவ்வசனமானது எல்லாரும் கடைசியில் இரட்சிக்கப்படுவார்கள் என்று *போதிப்பதில்லை* என்பதை மாத்திரம் நான் எளிமையாகக் கூற அனுமதியுங்கள்.

## இவ்வசனப்பகுதி எதைப் *போதிக்கிறது*

**ஆலோசிக்கப்பட்ட ஒரு கேள்வி**

நாம் 5:12-21 வசனப்பகுதி எதைப் *போதிப்பதில்லை* என்பதை வலியுறுத்தியுள்ளோம், ஆனால் நாம் இன்னமும் அது எதைப் *போதிக்கிறது* என்பதைத் தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது. 12ம் வசனத்தில் உள்ள "மரணம்" என்பது உடல்ரீதியான மரணமா, ஆவிக்குரிய மரணமா, அல்லது இவ்விரண்டினுடைய கலவையா என்பதே இவ்வசனப்பகுதிக்கான விளக்கத்தைப் பெரிதும் பாதிக்கும் கேள்வியாக உள்ளது. இந்தக் கேள்விக்கு சுலபமான பதில் எதுவும் இல்லை.

12ம் வசனம் எவ்வாறு வாசிக்கப்படுகிறது என்பது இங்கே தரப்படுகிறது: "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே *மரணமும்* உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று." சந்தர்ப்பப்பொருளில் "மரணம்" என்ற வார்த்தை இங்கு *உடலுக்குரிய* மரணத்தையே குறிக்கிறது என்று சந்தேகமின்றிக் கூறுபவர்களின் விவாதத்தை நான் படித்திருக்கிறேன். அந்த நிலைப்பாட்டின் பலங்கள் சிலவற்றை நாம் இங்கு ஆழமாக யோசித்துப் பார்ப்போம்.

(1) 12ம் வசனத்தின் முதல் பாகம், ஆதியாகமம் 2 மற்றும் 3ம் அதிகாரங்களில் ஆதாம் பாவம் செய்த வரலாற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது, அவ்வேளையில் தேவன் ''நீ சாகவே சாவாய்'' என்று கூறினார் (2:17; 3:3ஐக் காணவும்). நீங்களும் நானும் பாவத்தின் விளைவு பற்றி

வேதாகமத்தின் நான்காயிரத்திற்கும் கூடுதலான ஆண்டுகளினுடைய போதனை என்ற அனுகூலத்தைக் கொண்டிருக்கிறோம், எனவே நாம் ஆதாமின் பாவம் உடல்ரீதியான மற்றும் ஆவிக்குரிய மரணம் ஆகிய இரண்டையுமே விளைவித்தது என்று புரிந்துகொள்கிறோம். இருப்பினும், ஆதாம் அந்த வார்த்தைகள் *உடலுக்குரிய* மரணத்தை அர்த்தப்படுத்தியதாகவே புரிந்துகொண்டிருப்பான். ஏனென்றால் விலக்கப்பட்ட மரத்தின் கனியை உண்ட நிலையில் அவனால் ஜீவவிருட்சத்தின் கனியை உண்ணமுடியாதிருந்தது (2:9; 3:24). அவனது மாம்சம் நம் மாம்சத்தைப் போலவே அழியத்தொடங்கிற்று.[18]

(2) பவுல், ஆதாம்/கிறிஸ்து ஒப்புவமையை முன்னதாக எழுதிய ஒரு நிருபத்தில் பயன்படுத்தினார் (1 கொரிந்தியர் 15:21, 22, 45-49ஐக் காணவும்). ரோமர் 5:12-21 வசனப்பகுதியானது 1 கொரிந்தியர் 15:22ன் சிந்தனையை எதிரொலிப்பதாகக் காணப்படுகிறது: "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." 1 கொரிந்தியர் 15ல், *உடலின்* உயிர்த்தெழுதலே முக்கிய வலியுறுத்தமாக உள்ளது, எனவே *உடலின்மீது* பாவத்தின் செயல்விளைவானது அதைப்போன்றே ரோமர் 5ல் நமது வசனப்பகுதியிலும் முக்கிய ஆலோசனைக்குரியதாக உள்ளது என்று சொல்வது பொருத்தமானதாக உள்ளது.

(3) இவ்வசனப்பகுதியானது ஒரு மனிதனின் பாவம் மனிதகுலம் முழுவதையும் பாதித்தது என்று தெளிவாகப் போதிக்கிறது. கால்வினீய முடிவுகளை நாம் எண்ணாதிருந்தால், மனிதகுலம் *முழுவதையும்* பாவம் செய்யாத சிறுபிள்ளைகளைக்கூட ஆதாமின் பாவம் எவ்வாறு பாதிக்க முடியும்? அவனது பாவத்தினால், நாம் யாவரும் *உடல்ரீதியாக* மரிக்கிறோம்.

இவ்வசனப்பகுதியில் ''மரணம்'' என்பது *ஆவிக்குரிய* மரணத்தைக் குறிக்கிறது என்று கூறுபவர்களின் வாதங்களையும் நான் ஆழ்ந்து சிந்தித்திருக் கிறேன். இந்த விளக்கமானது இரண்டு பலங்களைக் கொண்டுள்ளது:

(1) இவ்வசனப்பகுதி, "இப்படியாக" என்று தொடங்குகிறது, இது பவுல் இதற்கு முன்னதாகக் கூறியவற்றுடன் இவ்வசனப்பகுதியைப் பிணைக்கிறது. உடல்ரீதியான அக்கறைகளைக் காட்டிலும் ஆவிக்குரிய அக்கறைகள் இந்த முந்திய வசனப்பகுதியின் சந்தர்ப்பப்பொருளுக்கு மேன்மையாகப் பொருந்துகிறது.

(2) இந்த நிலைப்பாடு "எல்லாமனுஷரும் பாவம் செய்தபடியால்" (வசனம் 12) என்பதை 3:23ல் அது கூறும் அதேபொருளை அர்த்தப்படுத்த அனுமதிக்கிறது, மற்றும் "நீதிமானாக்கப்படுதல்" (வசனம் 19) என்பது போன்ற வார்த்தைகள், இதற்கு முந்திய நான்கரை அதிகாரங்களில் பயன்படுத்தப்பட்ட அதே வகையில் பயன்படுத்தப்பட வேண்டியவைகளாக உள்ளன. (ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் சில திறவுகோல் வார்த்தைகளை, வேறுபட்ட சந்தர்ப்பப்பொருளில் வேறுபட்ட விஷயங்களை அர்த்தப்படுத்தப் பயன்படுத்தினார்; ஆனால், விதிப்படி மிகவும் பொதுவான அர்த்தமே தேர்ந்துகொள்ளப்பட வேண்டியதாக உள்ளது.)

கடைசியாக, நான் உடல்ரீதியான மற்றும் ஆவிக்குரிய மரணங்களுக்கு இடையில் ஒன்றைத் தேர்ந்துகொள்ளுதல் என்பது தவறாக இருக்கிறது, அதாவது பவுல், ஆதாமின் பாவத்தினால் உண்டான எந்த ஒரு மற்றும் ஒவ்வொரு தண்டனை மற்றும் விளைவையும் தனது சிந்தையில் கொண்டிருந்தார் என்று வலியுறுத்துபவர்களின் விளக்கங்களையும் வாசித்திருக்கிறேன்.[19] ஜேம்ஸ் D. G. டன் என்பவர், "யூதத்துவ

சிந்தனையின் பரந்த அளவில் ..., 'ஆவிக்குரிய' மற்றும் 'உடலுக்குரிய' மரணத்திற்கு இடையில் வித்தியாசம் இருப்பதாக கருத்து எதுவும் இருப்பதில்லை ... [அவர்கள்] இந்த முழுக்கருத்தையும் படைத்தவரிடத்தில் இருந்து படைப்பு விலகிச்செல்லுதல் என்பதாகப் பண்புபடுத்தியுள்ளனர்" என்று எழுதினார்[20] மோரீஸ் என்பவர், "மரணத்தின் இருவகைகளுக்கும் குறிப்புரையைக் காணுதல் என்பது இவ்விரு வசனப்பகுதியையும் [வசனங்கள் 17, 21] புரிந்துகொள்வதற்கான மிகச்சிறந்த வழியாக இருக்கலாம். உடல்ரீதியான மரணம் என்பதே சிந்தையில் உள்ளது, ஆனால் உடல்ரீதியான மரணம் தன்னிலே மாத்திரம் இருப்பதில்லை; ஆவிக்குரிய மரணத்தின் குறி மற்றும் அடையாளம் போன்றே உடல்ரீதியான மரணமும் உள்ளது" என்று கூறினார்.[21]

ரோஜர்ஸ் என்பவர், இந்த நிருபம் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டபோது, தொடக்கத்தில் அதைப் பெற்றுக்கொண்டவர்கள், அதைத் தங்களுக்கு *வாசித்துக்காட்டப்படுதலைப்* பெற்றுக்கொண்டு இருந்திருப்பார்கள் என்று சுட்டிக்காண்பித்தார்.[22] 5:12-21 ஒரு சில நிமிடங்களில் உரத்து வாசிக்கப்படக்கூடும் என்பதால், அதைக் கவனித்திருப்பவர்கள் அவ்வசனப்பகுதியில் உள்ள பின்வரும் முதன்மை வலியுறுத்தத்தையே தங்கள் சிந்தையில் தக்கவைத்திருப்பார்கள்: மனிதகுலத்திற்கு ஆதாம் அறிமுகப்படுத்திய - மற்றும் அதைவிட அதிகமான எல்லா - பிரச்சனையைப் பற்றியும் கிறிஸ்து அக்கறை எடுத்துக்கொண்டார். எட்வர்ட்ஸ் என்பவரும் இதைப் போன்ற கருத்தையே முன்வைத்தார்.[23] விவரங்களில் அல்ல ஆனால் முழுமையான சித்தரிப்பிலேயே இந்த "அச்சுவேலைப்பாட்டின்" பலம் உள்ளது என்று அவர் குறிப்பிட்டார். விவரங்களை வலியுறுத்திக்கொண்டிருத்தல் என்பது மாதிரி/எதிர்மாதிரி ஒப்பீட்டின் கருத்தைத் தவறவிடுதலாகும் என்று அவர் ஆலோசனை தெரிவித்தார்.

12ம் வசனத்தில் உள்ள "மரணம்" பற்றிய இந்த எல்லா நிலைப் பாடுகளினாலும் நான் மனம் கவரப்பட்டிருக்கிறேன். இந்தக் கண்ணோட் டங்களைப் பற்றிக்கொண்டுள்ள யாவரும், வேதவசனங்களின் வேறு எவ்விடத்தி லாவது உள்ள தெளிவான வசனப்பகுதிகளை மீறாதிருக்கும் வரையிலும், இவற்றில் ஏதாவது ஒன்று தவறாக இருக்கிறது என்று உறுதியாக என்னால் கூற இயலாது. ஒவ்வொரு அணுகுமுறையிலும் பலங்களும் பலவீனங்களும் காணப்படலாம். ஒருவர் எந்த நிலைப்பாட்டை மேற்கொண்டாலும், வெற்றிகொள்ள வேண்டிய கடினமான சூழ்நிலைகள் உள்ளன.

**வேதவசனம் ஆராயப்படுதல்**

பவுலின் கருத்து பின்வருமாறு நேர்ப்போக்கானதென்று அவர் நினைத் திருக்கலாம்: ஆதாமுக்குள் நாம் இழந்தது எதுவோ அதைவிட அதிகமான வற்றை நாம் கிறிஸ்துவுக்குள் மறுபடியும் ஆதாயப்படுத்தி கொண்டோம். இது ஒரு முக்கியமான சிந்தனையாக, ஆழ்ந்தறிவுள்ள சிந்தனையாகக்கூட இருக்கிறது, ஆனால் இன்னமும் இது நேர்ப்போக்கானதாகவே உள்ளது. அவர் தமது வார்த்தைகள் பெற்றுக் கொண்டுள்ள நுட்பமான சோதித்தறிதலைக் காணும்போது திகைப்படைந்திருப்பார் என்பதில் சந்தேகமேயில்லை. இருந்த போதிலும், நாம் இவ்வசனப்பகுதியை ஆராய்ந்து பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம். இதை நாம் அடுத்த பாடத்தில் செய்யத் துவங்குவோம். ஒவ்வொரு வசனத்திலும் பவுல் கூறியது என்ன என்பது பற்றி நீங்கள் உங்கள் தனிப்பட்ட வகையில் தகவல்

பெற்ற முடிவுகளை மேற்கொள்ள முடியுமளவுக்குப் போதிய கருத்துக்களை முன்வைக்க நான் முயற்சிசெய்வேன்.

## முடிவுரை

ஆதாமின் பாவத்தினுடைய செயல்விளைவுகளைப் பற்றி ஒரு வகுப்பு கலந்துரையாடும்போது, பின்வரும் கேள்வி அடிக்கடி கேட்கப்படுகிறது: "ஆதாம் பாவம்செய்யாதிருந்தால் என்ன நடந்திருக்கும்?" *ஆதாம்* பாவம் செய்யாது இருந்திருந்தால், ஆதாமுக்கு என்ன நடந்திருக்கும் என்பது அந்தக் கேள்வியினுடைய ஒரு அம்சமாக இருக்கிறது. அந்தக்காட்சிபற்றிப் பல நூற்றாண்டுகளாக விவாதிக்கப்பட்டும் உள்ளது. ஏனோக்கு மற்றும் எலியா ஆகியோரைப் போலவே ஆதாமும் மரணமின்றி பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பான் என்பது பிரபலமான ஒரு கருத்தாக உள்ளது. இருப்பினும், பெரும்பான்மையான மக்கள் அந்தக் கேள்வியின் பின்வரும் இன்னொரு அம்சத்தின்மீது ஆர்வம் உள்ளவர்களாக இருக்கின்றனர்: "ஆதாம் பாவம் செய்யாதிருந்தால் *உலகம்* இப்போதுள்ள சூழ்நிலையில் இருக்குமா?" "என்னவாகியிருக்கும்" என்ற பொதுவான கேள்விகளைப்போலவே, இதுவும் பதில் அளிக்க இயலாததாகவே உள்ளது, ஏனென்றால் ஆதாம் பாவம் *செய்தான்.* ஆதாம் பாவம்செய்யாது இருந்து உலகத்தைக் குழப்பாதிருந்தால் … மற்றும் அவரது பிள்ளைகள் பாவம் செய்யாதிருந்தால், மற்றும் அவரது பிள்ளைகளின் பிள்ளைகள் பாவம் செய்யாதிருந்தால் … கடைசியில், அது என் விஷயத்திற்கு வரும்போது, *நான்* பாவம் செய்திருப்பேன் - கடைசியில், விளைவு என்பது ஒன்றுபோலவே இருந்திருக்கும் என்றே நான் எப்போதும் யூகிக்கிறேன்.

ஆதாமின்மீது ஒரு விரலைச் சுட்டிக்காட்டி, "பாவம் செய்து உலகத்திற்கு எல்லாவிதமான இடர்ப்பாட்டையும் கொண்டுவந்தது உனக்கு வெட்கக்கேடு" என்று கூறுதல் இந்தப்பாடத்தின் நோக்கமாக இருப்பதில்லை. நாம் யாவரும் ஆதாமின் அடிச்சுவடுகளில் நடந்திருக்கிறோம் என்பதே உண்மையாகும். நாம் எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்கள் ஆனோம் (ரோமர் 3:23). இதன் விளைவானது சரீரப்பிரகாரமான மரணத்தைக் காட்டிலும் மிகவும் மோசமானதாக இருக்கிறது: நாம் ஆவிக்குரிய வகையில் மரிக்கிறோம் (6:23) மற்றும் நமது ஆத்துமாவை "அக்கினிக்கடலில் தள்ளப்படும் இரண்டாம் மரணத்தின்" அபாயத்திற்கு உள்ளாக்குகிறோம் (வெளிப்படுத்தின விசேஷம் 20:13, 14). 5:12-21 பற்றிய நமது படிப்பு தொடருகையில், இயேசுவே நமது ஒரே நம்பிக்கையாக இருக்கிறார் என்பது மீண்டும் மறு உறுதிப்படுத்தப்படும். "ஒரே மனுஷனாலே [ஆதாமினாலே] பாவம் உலகத்தில் பிரவேசித்தது" (வசனம் 12), ஆனால் இன்னொரு மனுஷராலே [இயேசுவினாலே] கிருபை உலகத்தில் பிரவேசித்தது. நீங்கள் ஆதாமின் உதாரணத்தைப் பின்பற்றத் தேர்ந்துகொள்ளலாம், அல்லது நீங்கள் இயேசுவைப் பின்பற்றுவதை இன்றே தேர்ந்துகொள்ளலாம். எதை நீங்கள் தேர்ந்துகொள்வீர்கள்?

---

## பிரசங்கியார்களுக்கும் போதகர்களுக்கும் குறிப்புகள்

நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, உங்கள் உரையைக்

கேட்பவர்கள் இயேசுவைப் பின்பற்றுவதை எவ்வாறு தேர்ந்து கொள்ளக்கூடும் என்று அவர்களுக்குக் கூற விரும்பலாம் - அதாவது, அவர்கள் சுவிசேஷ செய்தியை விசுவாசித்து (1:16), தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி (2:4), கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என்ற தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு (10:9, 10), தங்கள் பாவங்களிலிருந்து மீட்படைய ஞானஸ்நானம் பெற்று (6:3-6), கிறிஸ்தவ வாழ்வை வாழுதல் (12:1).

இந்தப் பாடம் மூன்றுபாக எடுத்துரைப்பின் முதல்பாகமாக உள்ளது. நீங்கள் இவற்றிலுள்ள முக்கிய கருத்துக்களை மாத்திரம் சுட்டிக்காண்பித்து மூன்று பாடங்களையும் "இரண்டு ஆதாம்கள்" என்ற தலைப்பில் ஒன்றிணைக்க விரும்பலாம். இந்தப்பாடத்தில் உள்ள தகவல்கள் உங்கள் முன்னுரையாகப் பயன்படக்கூடும். உங்கள் மூன்று முக்கிய கருத்துக்கள், "இரண்டு 'ஆதாம்கள்' அறிமுகப்படுத்தப்படுதல்," "இரண்டு 'ஆதாம்கள்' நேரெதிராக ஒப்பிடப்படுதல்," மற்றும் "இரண்டு 'ஆதாம்கள்' ஒப்பிடப்படுதல்" என்பவையாக இருக்கக்கூடும். மூன்றாம் பாடத்தில் உள்ள நடைமுறைப்பயன்பாடுகள் ("தெளிவான சத்தியங்கள்") உங்கள் முடிவுரையின் பகுதியாக இருக்கக்கூடும்.

5:12-21ஐ ஒரே பாடமாக எடுத்துரைக்கப் பலவழிகள் உள்ளன. சார்லஸ் ஸ்விண்டால் என்பவர், "இருமனிதர்களின் கதை" என்ற கருத்தைப் பயன்படுத்தி, சார்லஸ் டிக்கன்ஸ் என்பவரின் புகழ்பெற்ற கதையான "இருநகரங்களின் கதை" என்ற புத்தகத்தில் இருந்து விவரிப்புகளைத் தரவழைத்தார்.[24] வில்லியம் பார்க்ளே என்பவர் நமது வேதவசனப்பகுதிபற்றிய தமது படிப்புக்கு "அழிவு மற்றும் மீட்பு" என்று பேரிட்டு, நாம் "பாவத்தினால் அழிக்கப்பட்டோம்" ஆனால் "கிறிஸ்துவினால் மீட்கப் பட்டோம்" என்பதை வலியுறுத்தினார்.[25] பல எழுத்தாளர்கள், ஜான் மில்ட்டன் என்பவரின் புகழ்பெற்ற இலக்கியமான "Paradise Lost - and Regained" என்ற புத்தகத்தின் தலைப்பைக் கடன்பெற்றுள்ளனர். நமது வேதவசனப்பகுதியில் [ஆங்கில வேதாகமத்தில்] "reign" மற்றும் "reigned" என்ற வார்த்தைகள் பலமுறை பயன்படுத்தப்பட்டுள்ளதால் (வசனங்கள் 14, 17, 21), D. ஸ்டுவார்ட் பிரிஸ்கோ என்பவர் தமது விளக்கவுரைகளுக்கு "நான்கு ஆட்சியாளர்கள்" என்று தலைப்பிட்டார்.[26] நீங்கள் இவ்வசனப்பகுதியின் "அதிகமானவைகள்" பற்றிய குறிப்புகள்மீதும்கூட மையங்கொள்ள முடியும் (வசனங்கள் 15, 17; வசனம் 20ஐக் காணவும்).[27]

---

குறிப்புகள்

[1]Adapted from J. D. Thomas, *Romans*, The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 40. [2]Moses E. Lard, *Commentary on Paul's Letter to Romans* (Lexington, Ky.: N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 162. [3]Richard Rogers, *Paid in Full: A Commentary on Romans* (Lubbock, Tex.: Sunset Institute Press, 2002), 83. [4]Douglas J. Moo, *Romans*, The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 181. [5]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 149. [6]R. St John Parry, *The Epistle of Paul the Apostle to the Romans* (Cambridge: University Press, 1921), 84. [7]Jim McGuiggan, *The Book of Romans,* Looking Into The Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 178. [8]Larry Deason, *"The Righteousness of God": An In-depth Study of*

*Romans,* rev. (Clifton Park, N.Y.: Life Communications, 1989), 142. [9]Ibid., 156. [10]Quoted in Morris, 231.

[11]*கத்தோலிக்கப் போதனையின்படி, "இருட்டுஸ்தலம்" என்பது சிலுவையில் இயேசுவின் பலிக்கு முன்பு மரித்த நீதிமான்களுக்கான இடமாகவும் உள்ளது.* (Charles G. Herbermann, et. al., eds., "Limbo," in *The Catholic Encyclopedia* [New York: Encyclopedia Press, 1913], 9:256-59.) [12]*இப்படிப்பட்ட வசனப்பகுதிகளை, துன்மார்க்கர் கர்ப்பத்திலிருந்தே பொய்யர்களாக உள்ளனர் என்று மறைமுகமாக உணர்த்தும் சங்கீதம் 58:3 உடன் ஒப்பிட்டுப் பாருங்கள். நேர்ப்பொருளில் எடுத்துக்கொள்வதென்றால் இது இயலாத காரியமாக உள்ளது.* [13]James R. Edwards, *Romans*, New International Biblical Commentary (Peaboby, Mass.: Hendrickson Publishers, 1992), 147. [14]Moo, 189. [15]Edwards, 148. [16]Morris, 231. [17]Deason, 151. [18]*சிலர், ஆதாம் பாவம் செய்வதற்கு முன்னர் உடல்ரீதியான மரணமே இருக்கவில்லை என்று நம்புகின்றனர். மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் உண்பதற்குத் தாவர வகைகளே தரப்பட்டிருந்தன (ஆதியாகமம் 1:29, 30). ஆதாம் பாவம் செய்தபின்புதான், ஆதாமுக்கும் ஏவாளுக்கும் உடைகள் தயாரிக்க மிருகங்கள் கொல்லப்பட்டபோது முதல் மரணம் நிகழ்ந்தது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஆதியாகமம் 3:21).* [19]*ரோமர் 1:32ல் "மரணம்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது பற்றிய விளக்கங்களைக் காணவும் (ரோமருக்கு எழுதிய நிருபம் பற்றிய இப்பாட வரிசையின் முதல் புத்தகத்தில் " 'உலகத்தின் நிலை பற்றிய பவுலின் செய்தி' " என்ற பாடத்தில் காணவும்).* [20]James D. G. Dunn, *Romans 1-8*, Word Biblical Commentary, vol. 38 (Dallas: Word Books, 1988), 273.

[21]Morris, 230. [22]Rogers, 84. [23]Edwards, 146. [24]Charles R. Swindoll, *Coming to Terms with Sin: A Study of Romans 1-5* (Anaheim, Calif.: Insight for Living, 1999), 87-88. Swindoll called the two men "Man of Guilt" and "Man of Grace." [25]William Barclay, *The Letter to the Romans*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 77, 82. [26]D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans,* The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982). 119. [27]James Burton Coffman, *Commentary on Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1973), 208. *உங்கள் முன்னுரையில், நீங்கள் முந்திய பாடத்திலிருந்து "அதிகமானவைகள்" பற்றியும் குறிப்பிடமுடியும் (5:9, 10).*